**நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில்நகராட்சியின் தனிஅலுவலர் அவர்களால்05.06.2020 ம் தேதிமுற்பகல்11.00 மணிக்குநடைபெறஉள்ளது.**

**மன்றப் பொருள்**

**1.** மேட்டூர்நகராட்சிஎல்லைக்குட்பட்டஅனைத்துமக்களுக்கும்நகராட்சிமூலம்குடிநீர்விநியோகம்செய்யப்பட்டுவருகிறது.
விநியோகம்செய்யப்பட்டகுடிநீர்பாதுகாக்கப்பட்டகுடிநீர்என்பதைகுடிநீர்மாதிரிகளைசோதனைசெய்துஅறிக்கையினைஅரசுக்குஅனுப்பவேண்டும்எனநகராட்சிநிர்வாகஆணையர், சென்னைஅவர்களின்சுற்றறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படிஒவ்வொருமாதமும்குடிநீர்மாதிரிகளைஎடுத்துதமிழ்நாடுகுடிநீர்வடிகால்வாரியத்தில் சோதனைசெய்ய 2020-2021ம்ஆண்டிற்குஉத்தேசசெலவினம்ரூ.1,50,000/-க்கு (ஒருலட்சத்துஐம்பதாயிரம்மட்டும்) மன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம்அனுமதிக்கலாம்
2. நகராட்சிகுடிநீர்நிதியிலிருந்துபணியைமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1490/2020/இ1)**
**தீர்மான எண். 103 நாள். 05.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**2.** பொது சுகாதாரம் தற்பொழுது தென்மேற்கு பருவமழை துவங்கி உள்ளதால் பூச்சிகளால் பரவக்கூடிய சிக்குன் குனியா, டெங்கு போன்ற நோய்களை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், முதிர் கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு தேவையான சிறிய ரக புகை போக்கி இயந்திரங்கள் மற்றும் சிலிண்டர்களை கொள்முதல் செய்ய **01.06.2020**-ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ. எண். | விலைப்புள்ளி வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | 2லிட்டர் கொள்ளளவுகொண்ட சிலிண்டர் பொருத்தக்கூடிய கையினால் பயன்படுத்தப்படும் புகை போக்கி இயந்திரம் ஒன்றின் GST (உள்பட) விலைப்புள்ளி தொகை ரூ.பை. | சிலிண்டர் சிட் ஒன்றின் விலைப்புள்ளி தொகை GST (உள்பட) ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | M/s.NR டிரேடர்ஸ் , 22A, E.B.காலனி, டி.வி.எஸ். நகர், இடையார்பாளையம், கோயம்புத்தூர். | ரூ.27,140/- | ரூ.343/- | குறைவு |
| 2. | M/s.அமுதா ஏஜென்ஸிஸ், 2/342, குரும்பபாளையம், எம்.ஜி.புதூர், கோயம்புத்தூர். | ரூ.28,320/- | ரூ.366/- | அதிகம் |
| 3. | M/s.மருதமலை ஏஜென்சீஸ், 13/4,டாக்டர் நாராயணன் தெரு, எஸ்.எஸ்.குளம், கோயம்புத்தூர். | ரூ.29,500/- | ரூ.378/- | அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** பொது சுகாதாரம் பூச்சிகளால் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்கு மிகவும் முக்கியத்துவமாக பயன்படுத்தப்படும் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் மற்றும் சிலிண்டர்களை

கொள்முதல் செய்ய வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் M/s.NR டிரேடர்ஸ் ,22A, E.B.காலனி, டி.வி.எஸ். நகர், இடையார்பாளையம், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1431/2020/எச்1)**

**தீர்மான எண். 104 நாள். 05.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** மேட்டூர் நகராட்சி பகுதியில் அரசாணை எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.01.2014ன் படி பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ரூ.7308 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பாதாள சாக்கடை பணிக்காக சாலைகள் வெட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டதால் சாலைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. ஏற்கனவே நகராட்சி சாலைகள் குடிநீர் திட்ட குழாய்கள் பதிப்பதற்காக வெட்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களில் முடிவுற்ற பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதுப்பிக்க ரூ.1000 இலட்சத்தில்திட்டபிரேரனைதயார் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நிலையான நகர்புற அபிவிருத்தி திட்டம் (Tamil Nadu Sustainable Project)ன் கீழ் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட விவரப்படிபணிகளை மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பணியின் விபரம் பின்வருமாறு**

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | சிப்பம் |
|---|---|---|---|
| 1 | மேட்டூர் நகராட்சியில்பாதாளசாக்கடைமுடிவுற்றவட்டாரபோக்குவரத்துஅலுவலகசாலை, வ.உ.சிநகர் குறுத்தெரு, தங்கமாபுரிபட்டிணம் நகராட்சிதுவக்கப்பள்ளிமுன்புறசாலைமற்றும் தங்கமலைமுருகன் கோவில்சாலைஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல்பணி | 113.00 | I |
| 2 | மேட்டூர் நகராட்சியில்பாதாளசாக்கடைமுடிவுற்றசேலம் கேம்ப் சர்ச் ரோடு, போலீஸ் ஸ்டேசன், மில்குவாட்டர்ஸ் சாலை, பாரதிநகர் சாலைமற்றும் மகப்பேறுமருத்துவமனைமுதல்சாஸ்திரிநகர் சுடுகாடுசெல்லும் சாலைஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல்பணி | 174.00 | II |
| 3 | மேட்டூர் நகராட்சியில்பாதாளசாக்கடைமுடிவுற்றமாதையன் குட்டை சுடுகாடு செல்லும் சாலை, ஸ்டேட் பேங்க் பணியாளர் குடியிருப்பு சாலை மற்றும் எலிகரடு தெற்குபுற சாலை ஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல்பணி | 152.00 | III |
| 4 | மேட்டூர் நகராட்சியில்பாதாளசாக்கடைமுடிவுற்றபுனித மரியன்னை பள்ளி சாலை, ஆர்.இ.குடியிருப்பு சாலை, டாக்டர். சுப்ராயன் நகர் சாலை மற்றும் நகராட்சி அலுவலகம் முதல் இந்தியன் வங்கி வரை மற்றும் நகராட்சி அலுவலகம் முதல் ஆணையாளர் குடியிருப்பு வரை செல்லும் சாலை ஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல்பணி | 172.00 | IV |

| | | | |
|---|---|---|---|
| 5 | மேட்டூர் நகராட்சியில்பாதாளசாக்கடைமுடிவுற்ற காவேரி நகர் மெயின் ரோடு, காளியம்மன் கோவில் முதல் பெரியண்ண கவுண்டர் தெரு வரை உள்ள சாலை 3தலைமை ஆசிரியர் குடியிருப்பு பகுதிமுதல் நேரு நகர் வரை செல்லும் சாலை மற்றும் ஹோலி ஏஞ்சல் பள்ளி சாலை ஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல்பணி | 196.00 | V |
| 6 | மேட்டூர் நகராட்சியில்பாதாளசாக்கடைமுடிவுற்ற பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி முன் செல்லும் சாலை குமரன் நகர் சாலை, போலீஸ் குடியிருப்பு சாலை மற்றும் ஸ்டேட் பேங்க் குடியிருப்பு முன்புற சாலை, குள்ளவீரன் பட்டி நீரூந்து நிலையம் முன் புற சாலை, ஏடிசி டிப்போ ரோடு மற்றும் மசூதி தெரு ஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல்பணி | 193.00 | VI |
| | **மொத்தம்** | **1000.00** | |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்றம் நிர்வாகஅனுமதிவழங்கலாம்

**(ந.க.எண்.1756/2020/இ1)**

**தீர்மான எண். 105 நாள். 05.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**4.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சேலம் அவர்களின் அறிவுரைகளின்படி, கோவிட்-19 நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையாக கோவை மாநகராட்சியில் எக்கோ கிளீன் 50 பிளஸ் ஹெர்பல் என்ற மருந்தினை பொதுமக்கள் அதிகபடியான கூடுமிடங்களில் தெளிக்கப்படுவதால் நோய் தொற்று பரவல் தடுப்பதில் முன்னேற்றம் இருக்கின்றது எனவும், இவற்றை வாங்கி கோவிட் -19 தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்த அறிவுரைகளின்படி, ஸ்ரீ சக்தி ஏஜென்சி ஈரோடு என்ற நிறுவனம் மூலம் எக்கோ கிளீன் 50 பிளஸ் ஹெர்பல் மருந்து 20 லிட்டர் கொள்முதல் செய்யப்பட்ட வகையில் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.51920/- ஆகும். எனவே பட்டியல் தொகையியான ஸ்ரீ சக்தி ஏஜென்சி, ஈரோடு என்ற நிறுவனத்திற்கு கோவிட்-19 குறித்து வரப்பெற்ற நிதியிலிருந்து தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் கோவிட்-19 குறித்த தடுப்பு நடவடிக்கைகாக பொதுமக்கள் அதிகமாக கூடுமிடங்களில் எக்கோ கிளீன் 50 பிளஸ் ஹெர்பல் மருந்தினை தெளிக்க கொள்முதல் செய்யப்பட்ட 20 லிட்டருக்கு உரிய தொகையான ரூ.51920/-ஐ ஸ்ரீ சக்தி ஏஜென்சி, ஈரோடு என்ற நிறுவனத்திற்கு கோவிட்-19 குறித்து வரப்பெறப்படும் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 106 நாள். 05.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**5.**மேட்டூர் நகராட்சிஅலுவலகத்தில்பயன்படுத்தப்பட்டுவரும் ஈப்பு வாகனம் எண் .TN 52 V4660-ற்கு கீழ்கண்டபழுதுகளைசரிசெய்யஉத்தேசசெலவினம் ரூ.85,000/–க்கு மன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1. | நான்குவீல் |
| 2. | நான்குபிரேக் |
| 3. | அனைத்துஆயில்சர்விஸ் |
| 4. | செல்ப் மோட்டார், டைனமோ, சர்விஸ் |
| 5. | டிசல்டேங்க், ஆக்சிலேட்டர், கேபில்மாற்றம் |

| | |
|---|---|
| 6. | சேக்கப்சர் கட்டு கிங்புல்வேலைசெய்தல் |
| 7. | ரெடிடிட்டர் ஒஸ் மாற்றம் செய்தல் |
| 8. | ஐந்து டோர் பீடிங் மாற்றம் |
| 9. | ஹட்லைட் டிம் பிரைட் அவிட் புதியதாகமாற்றம் |
| 10. | டிசல்பம்புஓயிரிங் பழுதுபார்த்தல் |
| 11. | பைபர் பிளேடுமாற்றம் |
| 12. | கண்ணாடிஏற்றஇறக்கும் ஹண்டிங் மாற்றம் |
| 13. | இடதுபுறம் வீல் ஆட்சி மாற்றம் |
| 14. | வீல் கப் மாற்றம் |
| 15. | ஆரன் சுவிச் மாற்றம் |
| 16. | வீல்மக்காடுமாற்றம் |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசரஅவசியம் கருதி முன் அனுமதிபெற்றுபணிஉத்திரவுவழங்கமன்றம் அனுமதிக்கலாம்
3. நகராட்சிவருவாய்நிதியிலிருந்துபணியைமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1722/2020/இ1)**

**தீர்மான எண். 107 நாள். 05.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனிஅலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**

<u>நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனிஅலுவலர் அவர்களால் 29.06.2020ம் தேதி முற்பகல் 11.00 மணிக்குநடைபெறஉள்ளது.**
**<u>மன்றப் பொருள்</u>**

**1.** கோவிட் – 19 கொரனோ வைரஸ் தமிழகத்தில் இந்நோயின் தாக்கம் அனைத்து மாவட்டங்களிலும் பரவி வருகிறது. அவ்வாறு நோய் தொற்று பரவி வரும் வேளையில் இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் நோய் தொற்று கண்டவர்களின் வெளி மாவட்டங்கள் வெளிமாநிலங்கள் , வெளி நாடுகளிலிருந்து வந்தவர்கள், என தினசரி கண்டறிந்து அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு தினசரி 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மேலும் எதிர்வரும் 12.06.2020–ந் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடும் நிகழ்ச்சியும் நடைபெறுவதை ஒட்டியும் பொது இடங்கள், நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள பகுதிகள், தனிமைப்படுத்தப்பட்டடுள்ள பகுதிகளுக்கு கிருமிநாசினி தெளிக்க தேவையான பிளிச்சிங் பவுடர் அவசியம் தேவைப்படுகின்றது. எனவே பொது சுகாதாரப் பணிகளுக்காக நகராட்சி சட்டம் 1920 Sec 15 –ல் பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி பிளிச்சிங் பவுடரை 5 டன் கொள்முதல் செய்யவும், அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதீப்பீடு தொகை ரூ.2,25,000 /- ஆகும். எனவே கிருமிநாசினியான பிளிச்சிங் பவுடரை அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியினிலோ அல்லது அரசு கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளுக்காக வரப்பெறப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மேலும் எதிர்வரும் 12.06.2020–ந் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடும் நிகழ்ச்சியும் நடைபெறுவதை ஒட்டியும் பொது இடங்களில் கிருமிநாசினி தெளிக்கவும் தேவையான பிளிச்சிங் பவுடரை 5 டன் அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.2,25,000/-க்குள் கொள்முதல் செய்யவும், அதற்கான விலைப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்தோ , அல்லது அரசு கொரோனா நோய் தொற்று தடுப்பு குறித்து வரப்பெறப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. நகராட்சி சட்டம் 1920 Sec 15 –ல் வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கட்டு எண்.2711/2019/H1)**

**தீர்மான எண். 108 நாள். 29.06.2020**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**2.** கோவிட் 19 கொரோனா வைரஸ் பரவலை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், அனைத்து பொது இடங்கள் நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள இடங்கள், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் , அரசு மருத்துவமனை பகுதிகள், தினசரி மார்க்கெட், அம்மா உணவகம், உழவர் சந்தை பகுதிகளும், எதிர் வரும் 12.06.2020 –ந்தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி நடைபெறுவதை முன்னிட்டும் முதலமைச்சர் அவர்கள் வந்து செல்லும் அனைத்து பகுதிகளிளும் கிருமிநாசினி தெளிக்க தேவையான சுண்ணாம்புத்தூள் இருப்பு மிகவும் குறைவாக உள்ளது. எனவே மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கோவிட் தடுப்பு பணிகளுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகையினை ஒட்டியும், போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு, பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி

நகராட்சி சட்டம் 1920 Sec 15 –ல் சுண்ணாம்புத்துாள் 10 – டன் கொள்முதல் செய்யவும் அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ. 1,10,000/- ஆகும் எனவும், இச்செலவினத்தை கோவிட்-19 குறித்து வரப்பெறப்படும் நிதியினிலோ அல்லது பொது நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி நடைபெறுவதை பொருட்டு, கிருமிநாசினி தெளிக்க தேவையான நீர்த்த சுண்ணாம்புத்தூளை 10 டன்னை ரூ.1,10,000/– க்குள் செலவினம் மேற்கொள்ளவும், மேற்கானும் கிருமிநாசினியான சுண்ணாம்புத் தூளை அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம், விலைப்புள்ளிகள் ஏற்று நகராட்சி சட்டம் 1920 Sec 15ல் கொள்முதல் செய்யவும், இதற்கான செலவினத்தை கோவிட் –19 குறித்து வரப்பெறப்படும் நிதியினிலோ அல்லது பொது நிதியிலோ செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(கட்டு எண்.2205/2019/H1)**

**தீர்மான எண். 109 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

3. பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், தொற்று கண்டுள்ளப் பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்க தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூளை கொள்முதல் செய்ய 08.06.2020 -ந் தேதி விலைபுள்ளி அறிவுப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவுப்பு செய்யப்பட்டதில் 10.06.2020 – ந்தேதி கீழ்கண்ட அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் விலைப்புள்ளிகள் வரபெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்:

| வ.எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை கிலோ 1-க்கு ரூ. பை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | எஸ்:527, கெலமங்கலம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் லிட், கெலமங்கலம், கிருஷ்ணகிரி | 11/- | அதிகம் |
| 2. | டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி | 9.50/- | குறைவு |
| 3 | ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டகசாலை கே.கே.251, கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரி | 10,00/- | அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி செய்ய தேவையான நீர்த்த சுண்ணாம்பு துாளை கொள்முதல் செய்ய விலைபுள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற வேறு விலைப்புள்ளிகளில் வரிசை எண்-2ல் காணும் M/s.டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி என்ற அரசு சார்ந்த

கூட்டுறவு சங்கம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கப்ட்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**(கட்டு எண்.2205/2019/H1)**

**தீர்மான எண். 110 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**4.** பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், தொற்று கண்டுள்ளப் பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்க தேவையான பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய 08.06.2020 -ந் தேதி விலைபுள்ளி அறிவுப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவுப்பு செய்யப்பட்டதில் 10.06.2020 –ந்தேதி கீழ்கண்ட அரசு சார்ந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் விலைப்புள்ளிகள் வரபெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்:

| வ.எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை கிலோ 1-க்கு ரூ. பை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டகசாலை கே.கே.251, கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரி | 44/- | அதிகம் |
| 2. | எஸ்.527, கெலமங்கலம் , வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் லிட், கெலமங்கலம், கிருஷ்ணகிரி. | 45/- | குறைவு |
| 3 | டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி | 42.50/- | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கோவிட்- 19 கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகள், தனிமை படுத்தப்பட்டுள்ள பகுதிகள், மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி செய்ய தேவையான பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய விலைபுள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்-3ல் காணும் M/s.டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி என்ற அரசு சார்ந்த கூட்டுறவு சங்கம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கப்ட்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**(கட்டு எண்.2711/2019/H1)**

**தீர்மான எண். 111 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**5.** கோவிட் -19 நோவல் கொரனோ வைரஸ் தொற்றானது வெளி நாட்டிலிருந்து வருபவர்கள், வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்கள், வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்கள், உள்ளுர் பகுதிகளில் இடம் விட்டு இடம் வருபவர்கள் மூலம் நோய் தொற்றானது பரவி நாளுக்கு நாள் உயர்ந்து கொண்ட இருக்கின்றது. மேலும் மேட்டூர் நகராட்சியின் எல்லையினை ஒட்டியுள்ள கொளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ஏற்பட்ட ஒரு இறப்பு நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு நோய் தொற்று பரவி அந்த நிகழ்வுக்கு மேட்டூரிலிருந்து கலந்து கொண்டவர்களுக்கும், தொற்று ஏற்பட்டு **21.06.2020**-ந் தேதி **4** தொற்றுகளும், அதன் பின் ஒவ்வொரு நபருக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் தொற்று கண்டவர்களின் எண்ணிக்கை கூடுதலாகி கொண்டே செல்கின்றது. எனவே கோவிட் -19 தடுப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான கிருமிநாசினி மருந்துகள் சொற்ப அளவிலே இருப்பதாலும் மேலும் நோய் தொற்று அறிகுறிகள் உள்ளதா என கண்டறிய தெர்மா மீட்டர், ஆக்ஸிஜனை கண்டறிய உதவும் ஆக்ஸிமீட்டர் போன்ற கருவிகளும் தேவைப்படுவதால், கீழ்க்காணும் அளவுகளில் கொள்முதல் செய்து வாங்கி வழங்கவும். அதற்கான தோராய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| | | |
|---|---|---|
| **1)** | சோடியம் ஹைபோகுளோரைடு **5000** லிட்டர்<br>ஒரு லிட்டருக்கு ரூ.**26**/-வீதம் **5000**x26 = 1,30,000/- | ரூ. **1,30,000**/- |
| **2)** | லைசால் **2000** லிட்டர்<br>ஒரு லிட்டர் ரூ.**200**/-வீதம் **2000**x200 = 4,00,000/- | ரூ. **4,00,000**/- |
| **3)** | தெர்மா மீட்டர் ஒன்றின் விலை ரூ.**5750**/-வீதம்<br>**10** Nosx5750=57500 | ரூ. **57,500**/- |
| 4) | பல்ஸ் ஆக்ஸிமீட்டர் மிஷின் **5** எண்ணிக்கை ஒன்றின் விலை ரூ **3500**/- வீதம் **3500**x5= 17500 | ரூ. **17,500**/- |
| | | ரூ. **6,05,000**/- |

எனவே மேற்காணும் தடுப்பு மருந்து பொருட்களை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ. **6,05,000**/- ஆகும் எனவும், இச்செலவினத்தை கோவிட் -19 குறித்து வரப் பெறப்படும் நிதியினிலோ அல்லது பொது நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** கோவிட் - 19 நோவல் கொரனோ வைரஸ் தொற்று கண்டவர்களின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் தொற்று உயர்ந்து கொண்டே செல்வதால், வைரஸ் தொற்று பரவலை தடுக்க தேவையான சோடியம் ஹைபோகுளோரைடு ரூ. **1,30,000**/-க்குள்ளும், லைசால் ரூ.**4,00,000**/-க்குள்ளும், தெர்மா மீட்டர் ரூ.**57,500**/-க்குள்ளும், பல்ஸ் ஆக்ஸிமீட்டர் ரூ.**17,500**/- ஆக மொத்தம் ரூ.**6,05,000**/-க்குள் கொள்முதல் செய்யவும், பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி **1920** வருட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்காணும் கிருமி நாசினி மருந்துகள், தொற்று கண்டறியப்படும் கருவிகள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(கட்டு எண்.1232/2020/H1)**

**தீர்மான எண். 112 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**6.** பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோயினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான கிருமி நாசினி மருந்துகள் காய்ச்சல், சளி, கண்டறிய தெர்மா மீட்டர், பல்ஸ் ஆக்ஸி மீட்டர் ஆகியவற்றை கொள்முதல் செய்ய **22.06.2020**-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் **26.06.2020**-ந் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | விலைப் புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பொருட்களின் பெயர் | | | | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | **சோடியம் ஹைப்போகுளோரைடு லிட்டர் 1-ன் விலைப்புள்ளி தொகை ரூ.பை** | **லைசால் 5% லிட்டர் ஒன்றின் விலைப்புள்ளி தொகை ரூ.பை.** | **தெர்மா மீட்டர் 1-ன் விலைப்புள்ளி தொகை ரூ. பை** | **பல்ஸ் ஆக்ஸி மீட்டர். -ன் விலைப்புள்ளி தொகை ரூ. பை** | |
| **1** | M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் , **60/101**, A1B,**6** R.S.பில்டிங் குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல். | **23.50** | 196/- | 5376/- | 3248/- | குறைவு |
| **2** | M/s.ஸ்ரீஅக்ஷயா டிரேடர்ஸ் **4/10**, கிழக்கு சாராய பட்டறை வீதி, உறையூர், திருச்சி. | 24.64 | 201.60/- | **5432** | 3360/- | அதிகம்- |
| **3** | M/s ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், **1/34**, காளியப்ப நாய்க்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல். | 24 | 205/- | 5500 | 3350/- | அதிகம்- |

**அலுவலக குறிப்பு**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், கிருமிநாசினி மருந்து பொருட்கள் காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகளை கண்டறிய தெர்மா மீட்டர், பல்ஸ் ஆக்ஸி மீட்டர் போன்றவைகளை கொள்முதல் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் காணும் M/s ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் , **60/101**, A1B,**6** R.S.பில்டிங் குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
**(கட்டு எண்.1232/2020/H1)**

**தீர்மான எண். 113 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

*7. **மேட்டூர்நகராட்சி அலுவலகத்திற்கு கீழ்கண்டுள்ள நாளிதழ்கள்** 2020-2021**ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ**.50,000/- **க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.*

1. ***காலைக்கதிர்***
2. ***தமிழ்இந்து***

*3.இங்கிலிஷ்இந்து ( ஹிண்டு)*

<u>அலுவலக குறிப்பு</u>

*அனுமதிக்கலாம்*

**(ந.க.எண்.1171/2018/டி1)**

**தீர்மான எண். 114 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** ***இந்நகராட்சியின்*** 2017-18***ஆம்ஆண்டுக்கானதணிக்கைக்கட்டணம்ரூ.***89331/- ***மற்றும்*** 2018-2019***ஆம் ஆண்டுக்கான கட்டணம் ரூ.***148510/ ***செலுத்தப்பட வேண்டும் என தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.***89331/- ***மற்றும் ரூ.***148510/- ***ஐ அரசுக் கணக்கில் செலுத்திடவும், அதற்காகும் தொகை பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது.***

<u>அலுவலக குறிப்பு</u>

*மன்றம்அனுமதிக்கலாம்*

**(ந.க.எண்.147/99/வி3)**

**தீர்மான எண். 115 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**9**. மேட்டூர் நகராட்சியின் அனைத்து பிரிவுகளிலும் உள்ள எழுத்தர்கள் மற்றும் அலுவலர்கள் பயன்படுத்தப்பட்டு வரும் Printer களின் Toner கள் அடுத்த ஒரு வருடத்திற்கு கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.200000/—க்கு (ரூ.இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1497/2020/இ1)**

**தீர்மான எண். 116 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**10.** மேட்டூர் நகராட்சியின் பொறியியல் பிரிவின் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN27W7915ன் தகுதிச்சான்று 24.07.2020ல் முடிவடைவதால் வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிச்சான்றை புதுப்பிக்க உத்தேச செலவினம் ரூ.98,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1759/2020/இ1)**

**தீர்மான எண். 117 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5508/2019/MCA-3, நாள்.22.06.2020 ஆம் தேதிய கடிதத்தில் திரு.P.மணிவேல், துப்புரவு ஆய்வாளர் மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து தற்போது ஈரோடு மாநகராட்சியில் அயற்பணி மூலம் பணிமாறுதல் பெற்று பணிபுரிந்து வருவதாலும், மேற்படி துப்புரவு ஆய்வாளர் திரு.P.மணிவேல் அவர்களை ஈரோடு மாநகராட்சியில் நிரந்தரமாக ஈர்த்துக்கொள்வதற்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என மன்றப்பொருள் வைத்து தீர்மானம் அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.P.மணிவேல், துப்புரவு ஆய்வாளர் அவர்களை ஈரோடு மாநகராட்சியில் நிரந்தரமாக ஈர்த்துக்கொள்ள ஆட்சேபணை ஏதும் இல்லை என மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2068/2020/எச்1)**

**தீர்மான எண். 118 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 கதவு எண்.2/297 பொன்னகர், என்ற முகவரியில் வசித்து வரும் திரு.சின்னசாமி என்பவர் குடிநீர் இணைப்பு வேண்டி 30.08.2018 ரசீது எண்.047/01/2/18-19-ல் ரூ.4960/- குடிநீர் வைப்புத்தொகை நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். மேலும் இதே கதவு எண் கொண்ட குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு வைப்புத் தொகையாக மீண்டும் ரூ.4960/- செலான் எண்.047/01/20-21/0002099 நாள்.13.05.2020ல் செலுத்தியுள்ளார். மேலும் உதவி பொறியாளர் குறிப்பின்படி ஒரு கதவு எண்ணிற்கு இரண்டு வைப்புத்தொகை செலுத்தப்பட்டுவிட்டதால் ஒரு வைப்புத்தொகை ரூ.4960/- திரும்ப வழங்க உதவி பொறியாளர் 11.06.2020ல் குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மனுதாரரின் கோரிக்கையினை ஏற்றும் உதவி பொறியாளர் குறிப்பின்படி மனுதாரர் இரண்டாவது முறையாக செலுத்திய வைப்புத்தொகை ரூ.4960/-மட்டும் குடிநீர் நிதியில் இருந்து திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1595/2020/இ2)**

**தீர்மான எண். 119 நாள். 29.06.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனிஅலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**